**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண்.12/2024**

இந்நீதிமன்ற எழுத்தர் திரு. J. சிலம்பரசன், அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : செல்வி | மதம் | : இந்து |
| க/பெ | : தட்சிணாமூர்த்தி | ஜாதி | : -- |
| வயது | : 48 | கிராமம் | : முதூர் |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : அரக்கோணம் |

**12.08.2026**

**வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. வழக்கு சொத்து எந்த ஊரில் உள்ளது என்றால் வேணுகிருஷ்ணம்ம நாயுடு (VKN) கண்டிகை கிராமத்தில் உள்ளது. உஷா, சசிகலா எங்கு உள்ளார்கள் என்றால் உஷா பட்டாபிராமபுரத்திலும் சசிகலா சென்னை போரூரில் உள்ளார்கள். நான் அரக்கோணம் தாலூக்கா மூதூர் கிராமத்தில் குடியிருக்கிறேன் என்றால் சரிதான். நாங்கள் மூவரும் அவரவருடன் குடும்பத்துடன் குடியிருக்கிறோம் என்றால் சரிதான். உஷா அம்மா அப்பாவுடன் சின்னபரவத்தூர் கிராமத்தில் இருந்தார். தற்போதுதான் மாமியாருக்கு உடல்நிலை சரியில்லாததால் மாமியாருடன் பட்டாபிராமபுரத்தில் உள்ளார். தாவா சொத்தை யார் பயிர் செய்கிறோம் என்றால் நானும் உஷாவும் பயிர் செய்கிறோம்.

2. நான் நேரிடையாக பயிர் செய்கிறேனா அல்லது ஆள் வைத்து பயிர் செய்கிறோமா என்றால் நாங்களே போய் வருவோம். முடியாத நாட்களில் ஆள் வைத்து தண்ணீர் பாய்ச்சுவோம். தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் என்னவென்றால் 3 ஏக்கர் 69 செண்ட் ஆகும். இந்த சொத்து மட்டும் உள்ளதா வேறு ஏதேனும் சொத்து இதனுடன் சேர்ந்து உள்ளதா என்றால் வழக்கு சொத்தை ஒட்டி எங்களுக்கு வேறு நிலம் இல்லை. 3 ஏக்கர் 69 செண்ட் தவிர வேறு சொத்து எங்கள் குடும்பத்திற்கு உள்ளதா என்றால் உள்ளது. அதன் புல எண், விஸ்தீரணம் தெரியுமா என்றால் தெரியாது.

3. அந்த சொத்து எங்கு உள்ளது என்றால் அந்த சொத்தை சின்னசாமிக்கு விற்றுவிட்டோம். 3 ஏக்கர் 69 செண்ட் மட்டும்தான் எங்களிடம்

உள்ளது. எதற்காக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் தவறுதலாக 17/D, 34 கூட்டுப்பட்டாவில் வந்ததால் தங்களுக்கும் பங்கு இருக்கிறது என அவர்கள் பிரச்சனை செய்ததால் இந்த வழக்கு தாக்கல் செய்தோம். 3 ஏக்கர் 69 செண்டில் தங்களுக்கும் பாத்தியதை உள்ளது என்று கூறி தகராறு செய்வதாக இந்த வழக்கில் சொல்லியுள்ளோமா என்றால் தெரியவில்லை. 2015ல் என் அப்பா செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிவைத்தார் என்றாலும் 2016ல் பிழைதிருத்தல் ஆவணம் எழுதப்பட்டது என்றாலும் சரிதான்.

4. செட்டில்மெண்ட் ஆவணத்திலும், பிழைதிருத்தல் ஆவணத்திலும் எங்கள் மூன்று பேரின் சொத்தின் நான்கெல்லை குறிப்பிட்டுதான் எழுதியிருந்தார் என்றால் சரிதான். அந்த செட்டில்மெண்ட் ஆவணத்தின் அடிப்படையில்தான் நாங்கள் பட்டா மாற்றினோம் என்றால் சரிதான். தனித்தனியாக நான்கெல்லை குறிப்பிட்டு ஆவணம் என் அப்பா எழுதியுள்ள நிலையில் எங்கள் மூவருக்கும் 2020ல் ஏன் கூட்டுப்பட்டா வந்தது என்றால் தெரியவில்லை. வழக்கு சொத்து ஆதியில் யாருக்கு சொந்தம் என்றால் என் தாத்தா முனுசாமிக்கு சொந்தம். என் தாத்தா முனுசாமிக்கு சொத்து எப்படி வந்தது என்றால் அவருக்கு பாகத்தில் வந்தது.

5. பாகபிரிவினை நடந்தது என்பதற்கு ஏதேனும் ஆவணம் உள்ளதா என்றால் என் தாத்தா சொன்னதாக என் அப்பா சொன்னார். இன்றைய தேதிவரை சொத்து என் தாத்தாவிற்கு பாத்தியப்பட்டது, என் அப்பாவிற்கு பாத்தியப்பட்டது என்பதை காட்ட எங்களிடம் ஆவணம் இல்லை என்றால் கிணறு வெட்டி என் அப்பா மின்னிணைப்பு பெற்றுள்ளார். என் அப்பா வரி செலுத்தி ரசீது பெற்றுள்ளார். என் தாத்தாவிற்கு சொத்து இருந்தது என்பதை 'அ' பதிவேடு அடிப்படையில் உரிமை கோருகிறேன் என்றால் ஆமாம். வா.சா.ஆ.1 ஆவணத்தில் முனுசாமி ரெட்டி என்று மட்டும்தான் உள்ளது என்றாலும் தகப்பனார் பெயர் குறிப்பிடப்படவில்லை என்றாலும் சரிதான்.

6. வா.சா.ஆ.3 'அ' பதிவேடு குலசேகரன் பெயரில் உள்ளது என்றால் சரிதான். பட்டா எண்.950ல் குலசேகரன் மற்றும் 3 நபர்கள் என வா.சா.ஆ.3ல் உள்ளது என்றால் தவறுதலாக 3 பேர் சேர்க்கப்பட்டுள்ளது. பட்டா எண்.950–ஐ ரத்து செய்த பின்புதான் என் அப்பா பெயரில் பட்டா எண்.132ல் பட்டா கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 பட்டாவில் புல எண்.17D உள்ளது என்றால் சரிதான். புல எண்.17D தவறுதலாக வந்திருந்தது. அது சின்னசாமி, மாணிக்க ரெட்டியின் சொத்து அவர்கள் பலராமனுக்கு கிரையம் கொடுத்ததால் என் அப்பா கிரைய ஆவணம் எழுதிக் கொடுத்துவிட்டார். ஆனால் கிரைய தொகைகளை சின்னசாமி, மாணிக்க ரெட்டி பெற்று கொண்டார்கள்.

7. மேற்படி கிரைய விவரத்தை நாங்கள் எங்கள் வழக்கில்

சொல்லியுள்ளோமா என்றால் சொல்லவில்லை. 10.08.1998ம் தேதியிட்ட வா.சா.ஆ.4 கிரைய ஆவணத்தைதான் சொல்கிறேன் என்றால் ஆமாம். வா.சா.ஆ.4 கிரைய ஆவணம் பட்டா எண்.132ன் அடிப்படையில் எழுதப்பட்டது என்றால் ஆமாம். அதில் சின்னசாமியும், மாணிக்க ரெட்டியும் சாட்சி கையெழுத்து செய்துள்ளார்கள் என்றால் ஆமாம். தவறுதலாக புல எண்.17D வந்ததாக சொல்லாமல் தான் பிதுராஜ்ஜியமாக அனுபவித்து வந்து என்று சொல்லிதான் என் அப்பா கிரையம் கொடுத்துள்ளார் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. கிரையம் வாங்கியவர்களை விசாரிக்க வேண்டும்.

8. என் அப்பா 2015ல் செட்டில்மெண்ட் எழுதும்போது பிரதிவாதிகளிடம் எந்த கையெழுத்தும் எழுதி வாங்கவில்லை என்றால் சரிதான். குலசேகரன் மற்றும் மூன்றுபேர் என குறிப்பிட்டிருப்பது பிரதிவாதிகளின் மூதாதையர்கள் என்றாலும் அதனால்தான் வா.சா.ஆ.4ல் பிரதிவாதிகள் சாட்சி கையெழுத்து செய்துள்ளார்கள் என்றால் தவறுதலாக பட்டா மாறி வந்ததால் என் அப்பா ஆவணம் எழுதிக் கொடுத்து அவர்கள் சாட்சிகையெழுத்து போட்டுள்ளார்கள். 2015ல் செட்டில்மெண்ட் எழுதி வைக்க என் அப்பாவிற்கு தனிப்பட்டு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. என் அப்பா அனுபவிதது வந்ததால் எங்களுக்கு எழுதி வைத்தார்.

9. இந்த வழக்கிற்கு பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை விவரம் தெரியுமா என்றால் தெரியாது. சாமி ரெட்டி என் தாத்தா முனுசாமி ரெட்டியின் அப்பா என்றால் சரிதான். முனுசாமி ரெட்டியின் உடன்பிறந்தவர் பாலு ரெட்டி என்றால் சரிதான். முனுசாமி ரெட்டிக்கு என் அப்பா மட்டும்தான் ஒரே மகன் என்றால் சரிதான். பாலு ரெட்டிக்கு முனியப்ப ரெட்டி, மாணிக்க ரெட்டி, சின்னசாமி ரெட்டி ஆகிய மூன்று மக்கள் என்றால் சரிதான். இந்த பிரதிவாதிகள் மேற்படி மூன்று பேரின் பிள்ளைகள் என்றால் சரிதான்.

10. இந்த பட்டாவில் குறிப்பிட்டிருக்கிற குலசேகரன் மற்றும் மூன்று பேர் என்பது முனியப்ப ரெட்டி, மாணிக்க ரெட்டி, சின்னசாமி ரெட்டி ஆகியோர்தான் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சாமி ரெட்டிக்கு பின்பு குடும்பத்தில் பெரியவர் என்பதால்தான் முனுசாமி பெயருக்கு பட்டா வந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. முனுசாமி இறந்த பிறகு அவருடைய மகன் குலசேகரன் மற்றும் பாலுரெட்டி மகன்கள் மூன்று பேரின் பெயரிலும் கூட்டுப்பட்டா வந்தது என்றால் தவறு. என் அப்பா பெயருக்கு கூட்டுப்பட்டா எப்போது வந்தது தனிப்பட்டா எப்போது வந்தது என்றால் எனக்கு தெரியாது.

11. செட்டில்மெண்ட் ஆவணம் எழுதும்போது அதன் மூல ஆவணத்தையும் இணைத்துதான் ஆவணம் பதிவு செய்யப்பட்டது என்றால் ஆமாம். 2015ல் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதும் காலம் வரை

கூட்டுப்பட்டாவில் இருந்தது என்றால் அந்த பட்டா தவறுதலாக வந்தது ஆகும். செட்டில்மெண்ட் ஆவணம் எழுதுவதற்கு முன்பு தனிப்பட்டா பெற்று ஆவணம் எழுத எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் என் அப்பா பெயருக்கு தனிப்பட்டா வந்திருந்தது. அது மீண்டும் கூட்டுப்பட்டாவாகிவிட்டது. மேற்படி செட்டில்மெண்ட் ஆவணங்களில் கூட்டுப்பட்டா தவறாக வந்தது என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

12. என் அப்பா பெயருக்கு தனிப்பட்டா தவறாக கொடுக்கப்பட்டதால்தான் மீண்டும் பட்டா எண்.950 கூட்டுப்பட்டாவிற்கு மாற்றப்பட்டது என்றதால் என் அப்பா பெயருக்கு தனிப்பட்டா தவறுதலாக வரவில்லை. கூட்டுப்பட்டாதான் தவறுதலாக வந்தது. கூட்டுப்பட்டாவை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்காமல் பிரதிவாதிகளின் சொத்தை அபகரிக்க வேண்டி மோசடியாக செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்தியுள்ளோம் என்றால் சரியல்ல. மோசடி செய்யவில்லை. 2015ல் சொத்தை முழுமையாக எழுதிக் கொடுக்க என் அப்பாவிற்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. அரசையும் சார்பதிவாளரையும் ஏமாற்ற வேண்டி ஒரு பாகம் என காட்டி மூன்று ஆவணங்களாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

13. செட்டில்மெண்ட் ஆவணங்களை ரத்து செய்ய மாவட்ட பதிவாளரிடம் மேல்முறையீடு செய்யப்பட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள 'அ' பதிவேடு, செட்டில்மெண்ட் பதிவேடு ஆகியவற்றின் அடிப்படையில் சொத்து எங்களுக்கு தனித்து பாத்தியம் என்பது நிரூபணம் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. என் அப்பா கிணறு வெட்டி மின்னிணைப்பு பெற்றுள்ளார். அவர்கள் பெயர்தான் தவறுதலாக வந்துள்ளது. என் அண்ணன் இருக்கும்வரை பிரதிவாதிகள் எந்த பிரச்சனையும் செய்யவில்லை. என் அண்ணன் இறந்தபின்புதான் பிரச்சனை செய்கிறார்கள்.

14. என் அண்ணன் இறந்தபின்புதான் பிரச்சனை செய்கிறார்கள் என்று நான் தற்போது கூறும்விவரத்தை என் வழக்கிலோ பிரமாண வாக்குமூலத்திலோ சொல்லியுள்ளோமா என்றால் சொல்லவில்லை. சொத்து எங்களுக்குமட்டுமே பாத்தியம் என விளம்புகை பரிகாரம் கேட்கவில்லை என்றால் கேட்டுள்ளோம். தற்போது சொத்தில் என்ன பயிர் செய்துள்ளோம் என்றால் நெற்பயிர் செய்துள்ளோம். எப்போது பயிர் செய்தோம் என்றால் 2 மாதம் இருக்கும். அதற்கு முந்தைய போகம் என்ன செய்தோம் என்றால் சித்திரையில் அறுவடை செய்தோம். மொத்தம் எவ்வளவு கொள்முதல் செய்தோம் என்றால் மொத்தம் 3 ஏக்கர் 66 செண்டில் நீர்பாயும் இடத்தில் மட்டும் நெற்பயிர் செய்தோம். மீதி இடங்களில் துவரை, கேழ்வரகு, காராமணி விவசாயம் செய்தோம். சித்திரை மாதம் அறுவடையின்போது நெல் 60 மூட்டை வந்தது. மற்றவை வீட்டு தேவைக்கு

வைத்துக் கொண்டோம்.

15. ஏற்கனவே கேட்கும்போது தோட்டப்பயிர்களை சொல்லாமல் நெற்பயிர் மட்டும் என ஏன் சொன்னேன் என்றால் நெற்பயிர்களை நீர் பாய்ச்சி எப்போதும் வைப்போம். தோட்டப்பயிர்களை மழைக்காலத்தில் மட்டும் வைப்போம். வழக்கு சொத்தில் நாங்கள் பயிர் வைத்திருப்பதாக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் பிரதிவாதிகள்தான் பயிர் வைக்கிறார்கள் என்றால் நாங்கள்தான் பயிர் வைக்கிறோம். பிரதிவாதிகள் பிரச்சனை செய்கிறார்கள். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு என்ன நடந்தது என்றால் தங்களுக்கு பங்கு உள்ளது என்று கூறிக்கொண்டு உளுந்து பயிரில் ஆட்டை மேய விட்டார்கள். மரத்தை வெட்ட வந்தார்கள். அதைக் கேட்டதற்கு அரிவாளால் என் அம்மாவை வெட்ட வந்தார்கள்.

16. பிரச்சனை நடந்த அன்றைய தேதியில் வழக்கு சொத்தில் என்ன இருந்தது என்றால் நெற்பயிரும் மானாவாரி பயிரும் இருந்தது. நெற்பயிரில் பிரதிவாதிகள் ஏதேனும் பிரச்சனை செய்தார்களா என்றால் இல்லை. மானாவாரி பயிரில்தான் பிரச்சனை செய்தார்கள். நெற்பயிர் யார் பாகம் என்றால் எனது மற்றும் உஷா பாகம் ஆகும். எனது மற்றும் உஷாவின் பாகமான நெற்பயிர் இருந்த சொத்தில் பிரச்சனை இல்லாத நிலையில் அதற்கும் ஏன் வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் புல எண்.220/2தான் A,B,C என பிரிக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கு தாக்கல் செய்யும்போது எந்த சொத்து யாருக்கு ஒதுக்கப்பட்டது என்று என்னால் சரியாக சொல்லமுடியாது என்றால் சரியல்ல. கல் ஊன்றப்பட்டுள்ளது.

17. நெற்பயிர் A,B,C–ல் எதில் இருந்தது என்றால் A,B,C மூன்றிலுமே இருந்தது. பூமியில் உள்ளதுபோல் பட்டாவில் இல்லை என்றால் அளந்துதான் பட்டா கொடுத்தார்கள். பட்டாவில் இருப்பதுபோல் நாங்கள் அனுபவித்து வரவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் பட்டாவில் இருப்பதுபோல்தான் அனுபவித்து வருகிறோம். பிரதிவாதிகள் தகராறு செய்ததை ஊரில் யாரும் கேட்கவில்லையா என்றால் யாரும் நேரடியாக கேட்கவில்லை. ஊரில் யாராவது பிரதிவாதிகளுக்கு ஆதரித்தார்களா என்றால் இல்லை. ஊர் மக்களோடு வந்து எங்களை தடை செய்ததாக நாங்கள் சொல்லியிருந்தால் தவறுதான் என்றால் ஊர்மக்கள் யாரும் வந்து எங்களிடம் கேட்கவில்லை. பெண்பிள்ளைகள் என்பதால் பிரச்சனை செய்கிறார்கள் என்றுதான் சொன்னார்கள்.

18. நாங்கள் மூவரும் திருமணமாகி கணவர் வீட்டில் இருப்பதை சாதகமாக எடுத்துக்கொண்டு பிரதிவாதிகள் பிரச்சனை செய்கிறார்கள் என நாங்கள் குறிப்பிட்டுள்ளோம் என்றால் சரிதான். நாங்கள் வழக்கு சொத்து உள்ள ஊரில் இல்லாமல் கணவர்வீட்டில் இருப்பதால் வழக்கு சொத்தை நேரடியாக

பார்த்துக்கொள்ள முடியாததை பிரதிவாதிகள் சாதகமாக எடுத்துக் கொள்கிறார்கள் என நாங்கள் சொல்லியுள்ளோம் என்றால் ஆமாம். பிரதிவாதிகள் பிரச்சனை செய்ததற்கு காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளோமா என்றால் ஆமாம். அந்த புகாரை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தெரியவில்லை.

19. இன்றைய தேதிவரை வழக்கு சொத்தில் பிரதிவாதிகள்தான் அனுபவித்து வருகிறார்கள் என்றால் என் அப்பாதான் கிணறு வெட்டி மின்னிணைப்பு பெற்று வரி செலுத்தி தற்போது நாங்கள் வரி செலுத்தி வருகிறோம். மின்னிணைப்பு ரசீதுகள் தாக்கல் செய்துள்ளோமா என்றால் தாக்கல் செய்துள்ளோம். மின்னிணைப்பு எந்த புல எண்ணுக்கு கொடுக்கப்பட்டுள்ளது என்பது வா.சா.ஆ.24, 25ல் குறிப்பிடப்படவில்லை என்றால் தெரியவில்லை. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.16, 17 வர ரசீதுகள் கூட்டுப் பட்டா எண்.950, பட்டா எண்.132 ஆகிய இரண்டிற்கும் செலுத்தப்பட்டுள்ளது என்றால் தெரியவில்லை. நாங்கள் தனிப்பட்டு செலுத்தியு வரிரசீதுகளும் பட்டாவும் செட்டில்மெண்ட் ஆவணத்திற்கு பிந்தையவை என்றால் சரிதான்.

20. என் அப்பா எங்களுக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணமே செல்லாத நிலையில் அதனடிப்படையில் ஏற்பட்ட பட்டா, ரசீதுகள் செல்லாது என்றால் சரியல்ல. நான் வழக்கில் சொல்லியுள்ளவை தவறானவை என்றாலும் நாங்கள் வழக்கு சொத்தை எந்த காலத்திலும் தனித்து அனுபவிக்கவில்லை என்றாலும் பிரதிவாதிகள் கூட்டு பாத்தியஸ்தர்கள் என்ற நிலையில் அவர்களுக்கு எதிராக உறுத்துக் கட்டளை பரிகாரம் கோர முடியாது என்றாலும் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.
(மறு விசாரணை இல்லை)